DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 128/2022 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 2 |
| Name | பூவலிங்கம் |
| Father / Husband Name | செருவலிங்கம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 24th April 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் ஈசனூரில் குடியிருந்து வருகின்றேன். நான் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் டீமாஸ்டராக வேலை செய்து வந்ததால் என் மனைவி மற்றும் குழந்தைகள் ஈசனூரில் குடியிருந்து வந்தார்கள். என் மனைவி வினோதினி இடையமேலூர் ஊராட்சியில் பணியாளராக பணிபுரிந்து வந்தார்கள். எங்களுக்கு கோகுல்ராஜ், லிங்கேஸ்வரன் என்ற இரண்டு ஆண் பிள்ளைகள். அ.சா.1 என் அண்ணன்.

2) கடந்த 03.11.2021ம் தேதி மாலை 06.15 மணியளவில் அ.சா.1 எனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு என் மனைவி வினோதினியும், இளைய மகன் லிங்கேஸ்வரனும் பஸ் மோதி இறந்துவிட்டதாகவும், கோகுல்ராஜுக்கு காயம் ஏற்பட்டு

சீரியஸ்ஸாக இருப்பதாகவும், மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாகவும் சொன்னார். என் மனைவியும், மூத்த மகனான கோகுல்ராஜும் பாகனேரிக்கு அருகில் இருந்த நெப்புகப்பட்டி என்ற கிராமத்தில் அம்மாச்சி செல்வி வீட்டில் இருந்த லிங்கேஸ்வரனை கூப்பிடுவதற்காக Honda Activa என்ற இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு லிங்கேஸ்வரனை கூட்டிக்கொண்டு வினோதினியும், கோகுல்ராஜும், லிங்கேஸ்வரனும் அதே வாகனத்தில் வந்த போது அவர்களுக்கு துணைக்காக லிங்கேஸ்வரன் கூப்பிட்டதன் பேரில் எனது அண்ணனா அ.சா.1 அவர்களுக்கு துணைக்காக TVS XL வாகனத்தில் சென்றுள்ளார்.

3) இருவாகனத்திலும் என் குடும்பத்தார்கள் வந்து கொண்டிருந்த போது ஒக்கூர் அண்ணா நகரில் பஸ் ஸ்டாப் அருகே வந்துகொண்டிருந்த போது மாலை 05.45 - 06.00 மணியளவில் அரசு பேருந்து திருப்பத்தூரிலிருந்து சிவகங்கை நோக்கி வந்துகொண்டிருந்த பேருந்தானது முன்னும் பின்னுமாக அதிவேகமாகவும், ஹாரன் அடிக்காமலும் வந்த வாகனம் வினோதினி சென்ற வாகனத்திற்கு பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தியதாக தகவல் சொன்னார்.

4) நான் இரவு 03.30 மணியைப்போல் என் வீட்டிற்கு வந்து காலை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு வந்து விபத்தில் இறந்த என் மனைவியையும், என் மகனின் பிரேதத்தையும் பார்த்தேன். மூத்த மகன் கோகுல்ராஜை மதுரை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்றுவிட்டார்கள். என் மகன் கோகுல்ராஜுக்கு மேற்படி விபத்தில் வலது காலிலும், இடுப்பு பகுதியிலும், தொடையிலும் பலத்த காயம் ஏற்பட்டு இது நாள் வரை நடக்க முடியாமல் சிகிச்சை மேற்கொண்டு வருகிறோம்.

5) இறந்த மனைவியையும், இளைய மகனின் பிரேதத்தையும் பிரேத விசாரணை முடித்து 04.11.2021ம் தேதியன்று காலையில் நல்லடக்கம் செய்வதற்காக என் வசம் ஒப்படைத்தனர். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 24.04.2023
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**